...EMARA PUBLIC...
26 MAY 1955

பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P.S. வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1 பொள்ளாச்சி. 4—10—51. விலை அரையணா. 4-பக்கம். வெற்றி

சட்ட சபைக்கு யார் வேண்டும்?

ஊழியர்களுக்கு உதவி செய்யுங்கள்.

கோவை ஜில்லாவில் சட்டசபைக்கு 20-ஸ்தானங்கள் உண்டு இவைகளுக்கு அனேகமாகப் பணக்காரர்கள் தான் காங்கிரஸின் சார்பில் நிற்க மனுப்போட்டுள்ளனர். கோவை டவுன், கோவைத்தாலூக்கா, திருப்பூர் மேட்டுப்பாளையம், பவானி. இந்த ஐந்து இடங்களுக்கு மட்டும் ஊழியர்கள் மனுப் போட்டுள்ளனர் மற்ற ஜில்லாக்களில் ஊழியர்கள் தான் அதிகமாகமனுப்போட்டுள்ளனர். அஸாத் வெங்கிடுசாமி, சாமுவேல், கே. பி திருவேங்கடம், ஆர். குப்புசாமி, டி. பி. ராமசாமி, காதர், பவானி ராஜகோபால். இவர்கள் ஐந்து தொகுதிகட்கும் ஐந்து ஊழியர்களை யாரை எடுத்தாலும் ஜில்லாவிலுள்ள எல்லா ஊழியர்களும் வரவேற்பார்கள். இந்த தடவையாவது டெல்லி பார்லிமெண்ட்டுககு ஒரு ஊழியரையாவது கட்டாயம் அனுப்பும்படி ஊழியர்களின் சார்பில் தேர்தல் போர்டாரை வேண்டுகிறோம்.

மதுரை ஜில்லா தலைசிறந்து விளங்குகிறது. அங்கிருந்து பெருவாரியான ஊழியர்கள் தான் சட்டசபைக்கு வரப்போகிறார்கள். அதற்காக நாம் பெருமைப்படுகிறோம். கோவை ஜில்லாவிலும் ஐந்து பேர்களாவது ஊழியர்கள் சட்டசபைக்கு வர வேண்டுமென்பதே நமது ஆசை. இதை தமிழ்நாடு தேர்தல் போர்டார் மனதில் வைத்து ஊழியர்களுக்கு கட்டாயம் இடம்கொடுப்பார்கள் என்று நம்புகிறோம் இல்லையேல் மத்திய தேர்தல் போர்டாரிடம் ஊழியர்கள் காவடி எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

தமிழ்நாட்டின் தனிப்பெரும் தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் தலைமையில் ஊழியர்களுக்கு பரிபூர்ண நம்பிக்கை உண்டு. அவர் காலத்தில் ஊழியர்களின் அந்தஸ்து கட்டாயம் உயரும். நேர்மையான ஊழியர்களுக்கு என்றும் மக்களிடத்தில் மரியாதை உண்டு. மக்களின் நம்பிக்கையைப் பெறும்வண்ணம் ஊழியர்கள் நடந்துகொண்டும் சேவைசெய்தும் வருகிறார்கள். காங்கிரஸ் அதிகாரத்தில் இருப்பதால் காங்கிரஸின் பெயரால் பணக்காரர்கள் சட்டசபையை எட்டிப்பிடிப்பதில் வியப்பில்லை. போட்டி போட்டுக்கொண்டு பணக்காரர்கள் வருகின்றனர். காங்கிரஸின்;சக்தி பொதுஜனசக்தி. ஊழியர்கள் தான் மக்களின் நலனில் அக்கறைகாட்டி பொருளாதார விடுதலைக்காக பாடுபவர்கள் ஊழியர்களே ஒழிய பணக்காரர்கள் அல்ல

காங்கிரஸ் என்றென்றும் நிலைத்திருக்கவும், பொதுமக்களின், ஏழைகளின்ஸ்தாபனமாக இயங்கவும் வேலை செய்யவும் ஊழியர்களுக்கு மக்களும், தேர்தல்போர்டாரும் ஆதரவு காட்டவேண்டுகிறோம்.

சட்டசபைக்கு மெம்பராக

காக்கா

பிடிக்கவேண்டாம்!!

—O—

தேர்தலுக்குப் போட்டியிடும் அபேட்சகர்களே! நீங்கள் உங்களையே சோதித்து பாருங்கள்! உங்கள் கிரியைகள் என்ன? பேச்சுவார்த்தைகள் எப்படி? உங்களைப் பற்றி ஜனங்களுக்கு பிரிதி உண்டா? பணத்திமிரால் மாய் மாலம் போடுகிறீர்களா? ஜனங்களுக்கு நன்மை செய்திருக்கிறீர்களா? அவ்விதம் ஜனங்கள் உங்களை வேண்டுமென்று விரும்புகிறார்களா? நீங் எப்படி இருக்கிறீர்கள்!

தற்பிரியராயும், பணப்பிரியராயும், ம்புக்காராயும், அகந்தை உள்ளவர்க யும், தூஷிக்கிரவர்களாயும், நன்றியறி வர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களா சுபாவ அன்பில்லாதவர்களாயும், தூறு செய்கிறவர்களாயும், நல்லோன பகைக்கிறவர்களாயும், இறுமாப்புள்ள களாயும், சுகபோகப்பிரியர்களாயும் இ ந்தால் இவ்வித குணலக்ஷணங்கள் உ ளவர்கள் வரப்போகும் தேர்தலுக்குமெ பராக காக்கா பிடிக்கவேண்டாம்.

கண் காணிப்பை விரும்புகிறவன் ந வேலை செய்யவேண்டும். இது உண் ஜாக்கிரதை உள்ளவனும், அன்னிய உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனு தெளிந்த புத்தியுள்ளவனும், பொறுமை ள்ளவனும, சண்டை பண்ணுதவனு பண ஆசை இல்லாதவனும், மதுபான அருந்ாதவனும், அந்நியரை அடிக்க வனும், நல்லொழுக்கம் உள்ளவர்களா இருக்கவேண்டும். இப்படிப்பட்ட அ பவமுள்ளவர்கள்தான் மக்களுக்குசே செய்யமுடியும்!

தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டிக்த வரையும் மந்திரிமார்களையும், வால்பி துநடந்தால், உங்கள் காரியம் சித்தி குமா? உண்மையாக நீங்கள் அபஜ அடைவீர்கள் என்பதை மறக்காதீர் மக்களின் விருப்பத்தை நாடுங்கள்!!

இப்படிக்கு
அற்புதராஜபாண்டியன்,
வடசித்தூர்.

குருவி ஜோசியம்.

கோவை ஜில்லாவில் நமது ;குருவிஜோ சியத்திற்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுவி டது. பலர் அவரைப்பற்றி ஜோசியம்செ ல்லி, இவரைப்பற்றி ஜோசியம்சொ என்று கேட்கின்றனர்.

(2—ம் பக்கம் பார்க்கவும்.)

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சிவாசி

பொள்ளாச்சி 4—10—51. வியாழன்.

வாழ்க நீ எம்மான்!

இந்தியாவின் நடமாடும் ...ய்வம்மகான்மகாத்மாவின் பிறந்ததினம் ...க்டோபர் 2-ம் தேதி உலக சிரேஷ் ... அகிம்சாமூர்த்தி சத்திய அவதாரம், ...ழைகளின்பங்காளன், இன்று நம்மிடை ...யில்லை. நாட்டு மக்களுக்கு விடுதலையை ...ங்கிக்கொடுத்தார். ஆனால் அதை மக் ...ா அனுபவிப்பதை அவர்கண்ணால் பார் ...முடியவில்லை. இன்று அவர் நம்மிடை ...யில்லாவிட்டாலும், அவரின் ஆத்மா ...வரின் கொள்கைகள், அவரின் போத ...கள் நம்முன்னே நிற்கின்றன. அவை ...ள நிறைவேற்றுவதில் நாம் வெற்றிபெற் ...ள்ளோமா? காந்தியின் பெயரைச்சொ ...ல்லிக்கொண்டு ஊரை ஏமாற்ற பலர் கிள ...ி உள்ளனர். அநேகர் எடுத்ததற்கெல் ...ாம் காந்தியின் பெயரை உபயோகப்படு ...துகின்றனர். ஆனால் அவரின் கொள்கை ...படி நடப்பவர் சிலர்தான். காங்கிரஸ்கா ...களிலேயே பலர் காந்தியின் திட்டங் ...ளை நிறைவேற்றுவதில்லை. காந்தியின் ...பெயரைச் சொல்லிக்கொண்டு மக்களை ...மாற்றம்பார்க்கின்றனர். பணக்காரர்கள் ...ழைகளின் ட்ரஸ்டியாக இருந்து உதவி ...செய்து வரவேண்டுமென்பதே காந்திஜி ...ன் தத்துவம் ஆனால் இன்றும் எத்தனை ...ணக்காரர்கள் காந்தியின் முழு உருவச் ...சிலையையும் வைத்து மாலையிட்டு, தீபால ...ங்காரம் தினம் செய்துகொண்டு ஏழை ...ங்களின் ரத்தத்தை அட்டைபோல் உறு ...ஞ்சுகின்றனர். பாட்டாளி வர்க்கம் பதைக் ...கின்றனர். உழைப்பின் பலனை உழைப்ப ...வன் தான் அனுபவிக்க வேண்டுமென் ...பது காந்தியத்தின் தத்வம். அதை அமு ...ல் செய்யும் காங்கிரஸ் பணக்காரர்கள் ...ண்டா. வீண் மாய்மாலம் செய்வதை ...விட்டு காந்திஜி காட்டிச்சென்ற பாதை ...யில் பணக்காரர்கள், ஏழைகள், விவசாயி ...தொழிலாளிகள் நடந்தால் நாட்டிற்கும், ...மக்கும் விமோசனம் உண்டு அதை மன...தில் வைத்துக்கொண்டு உத்தமன் மகாத்மாஜியின் பிறந்த நாளைக் கொண்டாடும்படி வேண்டுகிறோம்

(முதல் பக்கம் தொடர்ச்சி)

கோவை சி, பி. சுப்பையாவைப் பற்றியும், ஸ்ரீ டி எஸ். அவனாசிலிங்கம் செட்டியாரைப் பற்றியும் ஜோசியம் சொல்லும்படி குருவியைப் பலர் கேட்கின்றனர் நமது குருவி கூட்டைவிட்டு வெளியில் தலை நீட்டிய உடன் ஒரு நெல்லைக் கொத்திக்கொண்டு முன்னால் உள்ள ஒரு சீட்டை கொத்துகிறது. அந்த சீட்டிலுள்ளது பிரதி வாரம் வாசகர்கள் படிக்கிறீர்கள். யார் சீட்டை குருவி எடுக்கும் என்பதை நமக்குத் தெரியாது. சமயம் வரும்போது சரியான ஜோசியம் குருவி சொல்லுமென்று நம்புகிறோம். கமிட்டியில் சாம்பலைக் கலக்கி விற்கும் காங்கிரஸ் தலைவர்களுண்டாயென்று சிலர் குருவியை ஜோசியம் கேட்டுள்ளனர். அதை ஆராய்ந்து சொல்லகுருவி அவகாசம் கேட்கிறது. நமதுகுருவியைப் பற்றிப்பலர் இன்னும் பலர் சரியாகப்புரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர். குருவியைப் பார்த்துவிடுகிறேன் என்றுகோவை பிரமுகர் ஒருவர் சொன்னதாக ஜோஸியம் வேறு வருகிறது. குருவி கூண்டிலேயே இல்லை வெளியில் அங்கும் இங்கும் பறந்துகொண்டு சுற்றி அலைந்து தான் வருகிறது. குருவியைப் பார்ப்பதற்கு முன் பொதுமக்கள் பிரமுகருக்கு எம். எல். ஏ. பதவிக்கு பட்டநாமம் சாத்திவிடுவார்கள் என்று குருவி ஜோசியம் சொல்லுகிறது. பணத்தாலோ, செல்வாக்காலோ, சிநேகத்தாலோ, விருப்புவெறுப்பாலோ, தயவு தாக்ஷண்யத்தாலோ, உருட்டல் மிரட்டல்களாலோ, குருவியை யாரும் கட்டுப்படுத்த முடியாது. நேர்மை அன்பு, சத்தியம் இவைகளுக்கு குருவி என்றும் மரியாதை கொடுக்கும். ஆகையால் வீணாகக் குருவிமீது கோபம்கொள்வதைவிட நேர்மையாக நடந்துகொள்ள முற்படவேண்டுமென அவர்களுக்குஜோசியம் சொல்லுகிறது. காங்கிரஸிற்குள்ளேயே யாரேனும் தில்லுமுல்லுகள் செய்தால் அவர்களைப்பற்றி குருவி ஜோசியம் என்றும் சொல்லும். அடுத்தவாரம் எங்கு செல்லுகிறதோ பார்ப்போம்.

30—9—51 ம் தேதி ஞாயிறு மாலை ஹரிஜன ஹாஸ்டலில் ஸ்ரீ என். வி. ராஜகோபால் தலைமையில் ஹரிஜனதினம் கொண்டாடப்பட்டது. அதுசமயம் ஸ்ரீமான்கள் சி. என். நாகப்பபிள்ளை, ஏ. கே சுப்ரமணியம் மாணவர்களும் பேசினர்.

நகரில் காந்தி ஜெயந்தி.

மகாத்மா காந்தியடிகளின் 83-வது பிறந்ததின விழாவையொட்டி நம் நகரிலும் சுற்று கிராமங்களிலும், தேசியக் கொடிகள் யேற்றுவிக்கப்பட்டன காலை 9-மணிக்கு நகரில் காந்திய ஊழியர் சங்கத்தில் ஸ்ரீ டி. கே. சீனிவாசம் பிள்ளை, தாலூகா காங்கிரஸ் ஆபீஸில் ஜனாப் எஸ். காதர் மைதீன், தேர்நிலைவெளியில் ஸ்ரீ சி. என் நாகப்பபிள்ளை, ஹரிஜன ஹாஸ்டலில் மாணவர் டி. ராமசாமியும் கொடியேற்றுவித்தனர், காலை 11-மணியிலிருந்து மாலை 4-மணிவரையில் சுற்றுப்புர கிராமங்களில் நகர இளைஞர் காங்கிரஸ் ஊழியர்களான அ. முத்துசாமி, அ. ராமச்சந்திரன், அ. பாசித் ஆகியோர் ஆங்காங்கே காந்தீயப்பிரச்சாரம் செய்தனர் மாலை 7-மணிக்குமயிலஞ்சந்தைப்பேட்டையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது, அதுசமயம் இளைஞர் காங்கிரஸ்காரியதரிசி அ. பாசித், கோவை ஸ்ரீ பி எஸ் சுந்திரம் ஆகியோர் தேசப்பிதா தன் வாழ்நாளில் செய்துகாட்டிய அரிய பெரிய சேவைகளை விளக்கியும், இன்று நாட்டில் உணவுப்பஞ்சத்தைப்பற்றி தப்புப்பிரச்சாரம் உலுத்தர்களுக்கு தக்கபதிலளித்தும், காந்தீயத்திற்கும் மார்க்கஸீயத்திற்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கியும், காந்தீயத்தை இந்தியாவில் மாத்திரம் அல்ல உலகெல்லாம் பரப்பி உலக நாடுகளிலே இந்தியா சிறந்தநாடு, எனபோற்றவேண்டும் அதற்கு நேருவின் ஆத்ம சக்தி அதிகரிக்க அவருடன் மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், வருங்கால நாட்டில் காந்தி கனவு கண்ட ராமராஜியம் ஏற்பட ஒவ்வொரு இளைஞனும் தியாகம்செய்ய இன்றுமுதல் சபதம்செய்துகொள்ள வேண்டுமென்றும் பேசினர். ஹரிஜன ஹாஸ்டல் மாணவர்கள் தேசியக்கீதம் பாட கூட்டம் இனிது முடிந்தது. ஷை கூட்டத்திற்கு ஸ்ரீ சி. என். நாகப்பபிள்ளை தலைமைவகித்தார்.

சூதாடியவர்களுக்கு கடுங்காவல்.

1—10—51 தேதி திங்கள் பொள்ளாச்சி பெஞ்சு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கௌரவ நீதிபதி ஸ்ரீ எஸ். விஜயராகவ அய்யங்கார் அவர்கள் மரப்பேட்டைவீதியில் ஜோதிஅம்மாள் வீட்டில் சூதாடியதாக டவுன்போலீஸாரால் கொண்டுவரப்பட்ட வழக்கில் 12-நபர்களுக்கு ஒருவாரம் கடுங்காவல் தண்டனையும் ஷை வீட்டுக்கார அம்மாளுக்கு ரூ 50-ம் அபராதமும் விதித்தார்.

பவானி ராஜகோபால், தான் வேண்டும்.

சட்டசபைக்கு பவானிதொகுதி அபேட்சகராக பீ. ஏ. ராஜகோபால் அவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று 22—9—51 சனி மாலை 5-மணிக்கு நெசவாளர்கள், ஜமக்காளக்கடை குமாஸ்தாக்கள்சங்கப்பிரதிநிதிகள், தையல்தொழிலாளர் பிரதிநிதிகள், தச்சுவேலை தொழிலாளர்கள், நகரசுத்தித் தொழிலாளர்கள், பாதரக்ஷை உற்பத்தி தொழிலாளர்கள், ஹரிஜன சங்கம், வேதநாயகியம்மன் டிராமாடிக் பாய்ஸ் சங்கம், காங்கிரஸ் ஊழியர்கள், நகர பிரமுகர்கள் சுமார் 1000-பேர் கொண்ட ஓர் மாபெரும் ஊர்வலம் ஈரோட்டில் நடத்தி மக்கள் தலைவர், தொழிலாளர் தலைவர், பீ. ஏ ராஜகோபால் அவர்களை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அமைதியான முறையில் தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்களிடம் தெரிவித்தனர்.

மாணவர் தமிழரசுக் கழகம்.

28—9—51 ம் தேதி வெள்ளி இரவு 8-மணிக்கு கழகக்கட்டிடத்தில் ஷெ கழகக் கமிட்டிக் கூட்டம் ஸ்ரீ பொ. நா நடராஜன் தலைமையில் நடைபெற்று, கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நடிகர் பி. யு. சின்னப்பா காலம் சென்றதற்கு கழகத்தின் சார்பில் அன்னாருக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

30—9—51 ல் ஞாயிறு மாலை 5-மணிக்கு மாணவர் தமிழரசுக்கழகத்தின் சார்பில் குமாரசாமி தலைமையில் "இன்றைய நிலையும் வருங்காலத்தமிழகமும்" என்பது பற்றி ஒரு சொற்பொழிவு நடைபெற்றது அதுசமயம், குமாரகோபால், வ. டா. முத்து, பொ. நா. வாசுதேவன், நடராஜன், தண்டாயுதம் பைந்தமிழன், இளங்கதிர், இளைஞர் காங்கிரஸ் அ. முத்துச்சாமி, அ பாசித் ஆகியோரும் பேசினர்கள்.

சுடச்சுட?!

○ ஜனப் அகமத் கித்வாய் மீண்டும் காங்கிரஸில் சேருவார் என்று தெரிவித்திருக்கிறார்!

(செய்தி)

கித்வாய் சேருவார், சேரப்போகிறார், சேர்ந்திடுவார் என்று காம்போதிராகம் பாடுகிறான் அடுத்த ஆத்து அம்பிப் பையல்!

○ சுதந்திரம் வருமே தவிர சுபீட்சம் தேடிவராது. சுபீட்சம் வேண்டுமானால் உழைக்கவேண்டும்.

(மணமகளில் என் எஸ் கிருஷ்ணன்)

இதையெல்லாம் உணர்ந்து உழைக்க எவ்வளவு தேசபக்தர்கள் முன்னுக்கு வரப்போகிறார்களோ என்று வருத்தப்படுகிறார் ஒரு மாஜிதேசபக்தர்.

○ முன்ஷியை விரட்ட 'போஸ்ட் கார்டு" இயக்கம்நடத்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தீர்மானம்.

(செய்தி)

காசில்லாமல் ரயில் பிரயாண இயக்கமும் தடைகள் மீறும் இயக்கமும் நடத்தியாகிவிட்டது. இந்த லட்சணத்தில் இனி இந்த இயக்கம் வேறுகேடா என்று கோபித்துக்கொள்கிறார் தி. மு கா.விற்கு முழுக்குப்போட்ட தோழர் ஒருவர்.

○ தாழ்த்தப்பட்டோருக்கு காங்கிரசாட்சி அதிக அநீதிகளை இழைத்துவிட்டது. சத்தியவாணி அம்மையாரின் இடித்துரை.

(பத்திரிகைசெய்தி)

இப்படி ஆதாரமில்லாத புரட்டுகளை கிளப்பி இந்த தட்டுவாணி அம்மையார் மணியம்மையைப்போல் 'திராவிடத்தாய்" ஆக எண்ணிவிட்டார் என்றுகூறுகிறார் தி. மு. க.விற்குசந்தாசெலுத்தாத ஆசாமி!

கேள்வி-பதில்.

கே: அமரகவி எப்போது வெளிவரும்?

(எஸ். அழகுமதி)

ப: தீபாவளிக்கு வெளிவருவதாக இருந்தது, ஆனல் என். எஸ். கே ரஷ்யா சென்றிருப்பதால் அவர் வந்த பின்தான் வெளிவரும்.

கே: இன்றைய சமுதாயத்தில் பணத்திற்கு அதிக மதிப்பா குணத்திற்கு அதிகமதிப்பா?

(பி. எஸ். வெங்கிட்டு):

ப: பணத்திற்குத்தான் அதிக மதிப்பு

போள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்
A. C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிரத
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி.

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

எனமல் & போட்டோ போர்டுகளுக்
M. முத்து, பெயிண்டிங் ஒர்க்ஸ்
மரப்பேட்டை வீதி.



RAJA VENKATRAM GHEE STORES,
PROP: V.C. ALAGIRISWAMY NAIDU
COIMBATORE.

சந்திரன் காலேஜ் ஸ்கூ
298, இடையர் வீதி, கோயமுத்
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு பட்ட ஆண், பெண்கள் E. க்கும் 20-வயதிற்கு மேற்பட்ட மெட்ரிகுலேஷனுக்கும் 9-ம் வகுப் ஹைஸ்கூல்களிலும் சேரலாம். இண்டர் வகுப்புகள் உண்டு. ஹ உண்டு.

தலைவர்:— S. R. Chandrar

வெற்றிகரமாக
நடைபெறுகிறது
கோவை கர்னடிக்கில்
8-வது வாரம்
பொள்ளாச்சி நாராயண
டாக்கீஸில்
4-வது வாரம்
னெஸ்கே பிலிப்ஸ்

மணமகள்

நடிகர்கள்
கிருஷ்ணன் மதுரம்,
பாலையா, சகஸ்ரநாமம்,
டி. பாலசுப்ரமணியம்,
லலிதா — பத்மினி,
பாண்டியன்,
புளிமூட்டை ராமசாமி
டைரெக்ஷன்:
என். எஸ். கிருஷ்ணன்.
கோவை நீலகிரி
ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:

கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்.

கவுண்டர் & கம்பெனி
லிமிடெட்,
கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,
டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்
விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திர வாதத்துடன் கிடைக்கும்.
Prop: B. பாலமாணிக்கம் செட்டி
யார் & பிரதாஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi